<u>**நீதித்துறை நடுவர்  நீதிமன்றம் எண்.1, உடுமலைப்பேட்டை.**</u>

**முன்னிலை. திருமதி.T.நித்யகலா, பி.காம்., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண்.1,**

**உடுமலைப்பேட்டை.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிகிழமை

(திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், பங்குனி திங்கள் 13 ஆம் நாள்)

<u>**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.283/2025**</u>

<u>**CNR.No.TNTI17– 001205–2025**</u>

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், உடுமலைப்பேட்டை காவல் நிலையக் குற்ற எண். 153/2025 |
| //எதிர்// | | |
| எதிரி | – | காட்டுராஜா (27/2025),<br>த/பெ. சண்முகம்,<br>எண்.125, காட்டணூர், முத்துார்,<br>இளையான்குடி தாலுக்கா,<br>சிவகங்கை மாவட்டம். |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 4(1)(c) TNP Act–வின் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரி மீது பிரிவு 4(1)(c) TNP Act–வின் கீழ் |
| தீர்மானம் | – | முடிவாக அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான 4(1)(c) TNP Act–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| புகார் நாள் | – | 15.03.2025 |
| கைது செய்யப்பட்ட நாள் | – | 15.03.2025 |
| பிணையில் சென்ற நாள் | – | 15.03.2025 ஆம் தேதியன்று காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| கோப்பு நாள் | – | 27.06.2025 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 09.03.2026 |

| | | |
|---|---|---|
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | – | 18.03.2026 |
| தீர்ப்புரை நாள் | – | 27.03.2026 |

இவ்வழக்கானது 27.06.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஷ்ணு ஈஸ்வரக்குமார், B.Sc., B.L., முன்னிலையாகியும், இவ்வழக்கின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், முன்வைக்கப்பட்ட இருதரப்பு வாதுரைகளும் கேட்டறிந்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்தளிக்கும்,

## தீர்ப்புரை

எதிரி மீது உடுமலைப்பேட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் குற்ற எண்.153/2025 ல் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு :

1) இவ்வழக்கில் கடந்த 15.03.2025 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு உடுமலைப்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட உடுமலை டவர் டாஸ்மாக் பார் அருகில் வைத்து எதிரி காட்டுராஜா என்பவர் சட்ட விரோதமாக தமிழக அரசின் அனுமதியின்றி சுயலாப நோக்கோடு சுமார் 180 ML அளவுள்ள EXPRESS பிராந்தியுடன் கூடிய பிராந்தி பாட்டில்கள்–7 யை விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி மீது உடுமலைப்பேட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் சட்டப்பிரிவு 4(1)(c) TNP Act–ன் கீழ் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) அழைப்பாணையின் பெயரில் இவ்வழக்கின் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது எதிரிக்கு வழக்கு தொடர்பான ஆவண நகல்கள்

அனைத்தும் குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்னர் எதிரி மீது பிரிவு 4(1)(c) TNP Act-ன் கீழான குற்றத்திற்கான முதல் நோக்கு முகாந்தரம் இருப்பதாக நீதிமன்றம் திருப்தியுற்றதால் குற்றச்சாட்டுக்களின் சாராம்சம் குறித்து தெளிவாக தமிழில் படித்துக்காட்டி விளக்கம் கேட்டபோது இவ்வழக்கின் எதிரி குற்றச்சாட்டுக்களை மறுத்து தான் குற்றவாளி அல்ல என தெரிவித்தார். மேலும் தன் மீது போடப்பட்ட வழக்கை விசாரணைக்கு உட்படுத்த வேண்டினார். எனவே, அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்ய அரசு தரப்பில் வழிவகை செய்யப்பட்டது.

3) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்வதற்காக அரசு தரப்பில் 03 சாட்சிகள் காண்பிக்கப்பட்டு 02 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 வரையிலும் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

__அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்__:

4) அ.சா.1 மணிகண்டன் என்பவர், உடுமலை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியில் இருந்த போது கடந்த 15.03.2025 ம் தேதி அ.சா.1 ம், சிறப்பு உதவி ஆய்வாளர் ஜனகராஜன் மற்றும் உதவியாளர் மது விலக்கு குற்றங்களை தடுக்க ரோந்து போன போது காலை 7.00 மணியளவில் ரகசிய தகவல் உதவி ஆய்வாளருக்கு கிடைத்து, பின்னிட்டு டவர் டாஸ்மார்க் கடை அருகில் மதுபானம் விற்பதாக தகவல் கிடைத்து, 07.00 மணிக்கு அங்கு சென்றுள்ளார்கள். அப்போது இரண்டு நபர்கள் ஒரு நபரிடம் ஏதோ வாங்கி கொண்டிருந்தவர்கள், அவர்களை பார்த்ததும் அந்த இரு நபர்கள் ஓடியுள்ளார்கள். கையில் பையுடன் இருந்த ஒரு நபரை பிடித்து விசாரித்த போது அவர் பெயர் காட்டுராஜா த/பெ. சண்முகம், காட்டனூர், சிவகங்கை மாவட்டம் என்று சொன்னவரிடம் 7 Express பிராந்தி பாட்டில்கள் இருந்துள்ளது. 180Ml அளவுள்ள

பிராந்தி பாட்டில்களை விலைக்கு விற்பனை செய்வதற்கு வைத்திருந்ததாக அவரே ஒப்பு கொண்டுள்ளார். உதவி ஆய்வாளர் மேற்படி பிராந்தி பாட்டில்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார்.

5) பொது ஜன சாட்சிகள் முன் வராததால் அ.சா.1ம் சிறப்பு உதவி ஆய்வாளர் ஜனகராஜன் என்பவரும் கையொப்பம் செய்துள்ளார்கள். கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து அ.சா.1 உடையது தான். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் வழக்கு சொத்துக்களுடன் எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து பின்னர் எதிரியின் மீது குற்ற எண்.153/2025 ச/பி.4(1) C TNP– Amendment Act ன் படி உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார்.

6) அ.சா.2 ராமேஷ்வரன் என்பவர், உடுமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 15.03.2025ம் தேதி காலை 06.30 மணியளவில் அ.சா.1ம், சிறப்பு உதவி ஆய்வாளர் ஜனகராஜன், காவலர் மணிகண்டன் ஆகியோருடன் உடுமலை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மதுவிலக்கு குற்றங்களை தடுக்கும் விதமாக ரோந்து சென்று கண்காணித்துக் கொண்டு செல்லும் பொழுது அ.சா.2 ஆனவருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் காலை 07.00 மணியளவில் உடுமலை டவர் டாஸ்மாக் திறந்த இடம் அருகில் கண்காணித்த போது ஒரு நபர் கையில் ஒரு பையுடன் உட்கார்ந்து கொண்டிருந்தவரிடம் இரண்டு பேர் வாங்கிக் கொண்டு இருந்தவர்கள், போலீஸ் பார்ட்டியை கண்டதும் ஓடியுள்ளனர்.

7) பின்பு அங்கு கையில் பையுடன் இருந்தவரை பிடித்து விசாரித்த போது அவர் தனது பெயரை காட்டு ராஜா த/பெ. சண்முகம் இளையான்குடி தாலுக்கா சிவகங்கை மாவட்டம் என்று கூறியவர், பொது இடத்தில் அரசின் அனுமதி இன்றி சட்டவிரோதமாக 180 ML அளவுள்ள எக்ஸ்பிரஸ் பிராந்தியுடன் கூடிய பிராந்தி பாட்டில்களை அரசு மதுபான கடையில் இருந்து வாங்கி வந்து அரசு

மதுபான கடைகள் மூடிய நேரத்தில் விற்று அதிக லாபம் பெற வேண்டி விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டு தானாகவே முன்வந்து எடுத்து ஆஜர் செய்துள்ளார்.

8) மேலும் அந்த இடத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் முன் வராததால் அ.சா.2 உடன் வந்த காவலர் மணிகண்டன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் ஜனகராஜன் ஆகியோரின் முன்னிலையில் 7.30 மணிக்கு கைப்பற்றுதல் தயார் செய்து எதிரியையும் வழக்கு சொத்துக்களையும் 11.50 மணிக்கு நிலையம் ஆஜராகி நிலைய குற்ற எண்.153/2025 சட்டப்பிரிவு 4(1) (C) TNP Act–ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9) பின்னர் அசல் நகல்களை உயரதிகாரிகளுக்கும் நீதிமன்றத்திற்கும் அனுப்பி வைத்து சாட்சிகள் மணிகண்டன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் ஜனகராஜன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை பரிசோதனைக்கு பின் தக்க இரண்டு நபர் ஜாமினில் விடுவித்துள்ளார். வழக்கு சொத்துக்களை வடிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். படிவம் 91 அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில்கள் அ.சா.பொ.1 ஆகவும், வெள்ளை நிற பை அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

10) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமானவற்றை எதிரியிடம் குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 313(1) (ஆ)–ன் கீழ் விளக்கி விசாரணை செய்தபோது எதிரி தனக்கு எதிரான அரசு தரப்பு சாட்சியங்களை மறுத்துரைத்தார். மேலும் இது பொய் வழக்கு எனவும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை எனவும்

கூறினார்.

11) கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வாதத்தின்போது எதிரி மீது உடுமலைப்பேட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண்.153/2025, சட்டப்பிரிவுகள் 4(1)(c) TNP Act–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு அரசு தரப்பில் 02 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு 03 சான்றாவணங்கள், அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி சான்றாவணங்களையும் சாட்சிகளையும் கொண்டு அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமாய் வாதிட்டார்.

12) கற்றறிந்த எதிரி தரப்பு வழக்குரைஞர் தனது வாதத்தின் போது எதிரி மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்று வாதிடப்பட்டுள்ளது.

**<u>பிரச்சனையும் தீர்வும்</u>**

13) இருதரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் இந்த வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீதான குற்றச்சாட்டினை அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படுகிறதா? என்பதேயாகும்.

14) இவ்வழக்கில் இவ்வழக்கில் எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள 4(1) (C) TNP Act–ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பொறுத்து அ.சா.2–ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில் கடந்த 15.03.2025 ம் தேதி காலை 06.30 மணியளவில் அ.சா.1 ம், சிறப்பு உதவி ஆய்வாளர் ஜனகராஜன், காவலர் மணிகண்டன் ஆகியோருடன் ரோந்து சென்று கண்காணித்துக் கொண்டு செல்லும் பொழுது தனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் காலை 07.00 மணியளவில் உடுமலை டவர் டாஸ்மாக் திறந்த இடம் அருகில் கண்காணித்த போது ஒரு நபர் கையில் ஒரு பையுடன் உட்கார்ந்து கொண்டிருந்தவரிடம் இரண்டு பேர் வாங்கிக் கொண்டு இருந்தவர்கள், போலீஸ்

பார்ட்டியை கண்டதும் ஓடியதாகவும், பின்பு அங்கு கையில் பையுடன் இருந்தவரை பிடித்து விசாரித்த போது அவர் தனது பெயரை காட்டு ராஜா த/பெ. சண்முகம் என்று கூறியவர், பொது இடத்தில் அரசின் அனுமதி இன்றி சட்டவிரோதமாக 180 ML அளவுள்ள எக்ஸ்பிரஸ் பிராந்தியுடன் கூடிய பிராந்தி பாட்டில்களை அரசு மதுபான கடையில் இருந்து வாங்கி வந்து அரசு மதுபான கடைகள் மூடிய நேரத்தில் விற்று அதிக லாபம் பெற வேண்டி விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டு தானாகவே முன்வந்து எடுத்து ஆஜர் செய்ததாகவும், அந்த இடத்தில் பொது ஜன சாட்சிகள் யாரும் முன் வராததால் தன்னுடன் வந்த காவலர் மணிகண்டன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் ஜனகராஜன் ஆகியோரின் முன்னிலையில் 7.30 மணிக்கு கைப்பற்றுதல் தயார் செய்து எதிரியையும் வழக்கு சொத்துக்களையும், எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் கூறியுள்ளார். மேலும் அ.சா.1 ஆனவரும் காவல் உதவி ஆய்வாளரின் சாட்சியத்திற்கு ஒத்துப்போகும் வகையில் தனது முதன்மை விசாரணையில் சாட்சியமளித்துள்ளது தெரியவருகிறது.

15) எனினும் அ.சா.1 ஆனவர் தனது குறுக்கு விசாரணையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் உடுமலை பஸ் ஸ்டாலண்டில் இருந்து 500 மீட்டர் தொலைவில் தான் இருக்கும் என்றால் சரிதான் என்றும், அந்த இடம் ஆள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடம் என்றால் ஆமாம் என்றும் கூறியுள்ளார். மேலும் அ.சா.2 ஆனவரும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நீங்கள் போகும் போது அதிக நபர்கள் இருந்தார்கள் என்றால் அதிக நபர்கள் இல்லை, சுமார் 4–5 பேர் இருந்தார்கள் என்று சொல்லியுள்ள நிலையில், மேற்படி சம்பவ இடத்திற்கு போலிசார் செல்லும் போது அங்கு பொது நபர்கள் இருந்துள்ளார்கள் என்பதும், 500 மீட்டர் தொலைவில் உடுமலை பஸ்ஸ்டாண்டு இருக்கிறது என்பது மேற்படி சாட்சிகளின் குறுக்கு விசாரணையில் தெரியவருகிற நிலையில் பொது ஜன சாட்சிகள் யாரையும் விசாரணைக்கு உட்படுத்தவில்லை.

மேலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆனவர்கள் தங்களது முதல் விசாரணையில் பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் காவலர்கள் முன்னிலையில் வழக்குச் சொத்துக்களை கைப்பற்றியதாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி நபர்களின் பெயர்களையோ விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்பதும் தெரியவருகிறது.

16) மேலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆனவர்கள் தங்கள் முதல் விசாரணையில் உடுமலை டவர் டாஸ்மாக் திறந்த இடம் அருகில் கண்காணித்த போது அங்கு ஒரு நபருடன் கையில் ஒரு பையுடன் உட்கார்ந்து கொண்டிருந்தவரிடம் இரண்டு பேர் ஏதோ வாங்கி கொண்டிருந்தவர்கள் தங்களை பார்த்ததும் வாங்கி கொண்டிருந்த 2 நபர்கள் ஓடியதாகவும், பின்பு அங்கு கையில் பையுடன் இருந்தவரை பிடித்து விசாரித்ததாகவும் கூறியுள்ள நிலையில் எதிரி சம்பவ இடத்தில் 180 Ml அளவுள்ள Express பிராந்தி பாட்டில்களை யாருக்கு விற்றார் என்ற விவரமும், அவரிடத்தில் இருந்து பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்பதும் புலனாகிறது. மேலும் புலன் விசாரணை அதிகாரி மேற்படி 2 நபர்கள் யார் என்பது குறித்து விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆனவர்கள் இரு சக்கர வாகனத்தில் சென்றதாக கூறியுள்ள நிலையில் மேற்படி ஓடிய இரண்டு நபர்களை பிடிக்க முடியவில்லை என்று கூறுவது ஏற்கும் வகையில் இல்லை. இது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது.

17) மேலும் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2 மற்றும் அ.சா.1 ஆனவர்கள் தங்களது முதல் விசாரணையில் எதிரியை பிடித்து விசாரித்த போது மதுபான கடை இல்லாத நேரங்களில் பிராந்தி பாட்டில்களை அதிக விலைக்கு விற்கலாம் என்று 180 Ml அளவுள்ள Express பிராந்தி பாட்டில்கள்–5 விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்தை ஒப்புக் கொண்டு தானாகவே முன் வந்து ஆஜர் செய்ததாக கூறியுள்ள நிலையில் எதிரியின் ஒப்புதல்

வாக்குமூலமானது இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்பதும் தெளிவாகிறது. எனவே இவர்களது சாட்சியங்கள் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள அரசு தரப்பு குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18) எனவே மேலே கண்ட விவாதங்களின்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 அனவர்களின் சாட்சியங்கள் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டினை நிரூபிப்பதற்கு போதுமானதாக இல்லை என்று தீர்வு கண்டுள்ள நிலையில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவிலலை என்று தீர்வு காணப்படுகிறது.

19) முடிவாக அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான 4(1)(c) TNP Act–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

20) இவ்வழக்கில் அயிட்டம்.1–சுமார் 180 ML அளவுள்ள Express பிராந்தியுடன் கூடிய பிராந்தி பாட்டில்கள்–7, அயிட்டம்.2–வெள்ளை நிற பை–1 ஆகியவை கைப்பற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் PR No.320/2025 என்ற எண்ணில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அயிட்டம்–1ல் பாட்டில்களில் உள்ள மதுவை முழுவதுமாக அழிக்கவும் மற்றும் அயிட்டம்–2 ஆனதை அழிக்கவும், காலி பாட்டில்களை அரசுடமையாக்கவும் உத்தரவிடப்படுகிறது. மேலும் இவ்வழக்கானது மேல் முறையீடு செய்யும்பட்சத்தில் மாண்புமிகு மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கிணங்க செயல்படவும் உத்திரவிடப்படுகிறது.

## Particulars under Rule 106 of Criminal Rules of Practice 2019

| S. No | Description of the accused | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Cr.No | Name of the Police Station | Name | Father’s Name | Occupation | Residency | Age |
| | 153/2025 | Udumalpet | Katturaja | Shanmugam | Labourer | No.125, Kattanur, Muthur PO, Ilayangudi TK, Sivangangai DT. | 27/2025 |

| Date of | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension | Release on Bail | Commitment | Commencement of Trial | Close of Trial | Sentence or Order | Service of copy of Judgment on accused | Explanation of Delay |
| 15.03.2025 | 15.03.2025 | 15.03.2025 | Bailed by Police 15.03.2025 | Not applicable | 09.03.2026 | 18.03.2026 | 27.03.2026 | Nil | No Delay |

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.27 20:23:38 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.

**இணைப்பு :–**

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 09.03.2026 | மணிகண்டன் (இரண்டாம் நிலைக் காவலர், கைப்பற்றுதல் மகசர் சாட்சி) |
| அ.சா.2 | 09.03.2026 | ராமேஷ்வரன் (புலன் விசாரணை அதிகாரி) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ 1. | அ.சா.1 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ 2. | அ.சா.2 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ 3. | அ.சா.2 | படிவம் 91 |

**எதிரி தரப்பு சாட்சிகள் :– இல்லை**

**எதிரி தரப்பு சான்றாவணம் :– இல்லை**

**அரசு தரப்பு சான்று பொருள் :–**

அ.சா.பொ.1 – எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில்கள்

அ.சா.பொ.2 – வெள்ளை நிற பை

**குறிப்பு :–**

1. எதிரி விசாரணைக்காலத்தில் பிணையிலிருந்துள்ளார்.
2. எந்த சாட்சியும் 3 வாய்தாக்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை
3. தீர்ப்பு குறித்து காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.27 20:23:33 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.

நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருப்பூர்
அவர்களுக்கு